REGD No M 4642

திராவிடநாடு

விலை
அணா 2.
சிலோன் 15 சதம்

மலர் 10. | 14-10-51 | இதழ் 16.

★ காந்தி ஜயந்தி ★

வெள்ளையருக்கு மட்டும்!''

ல் நிலையங்கள், ரயில் வண்டி
சிற்றுண்டிச் சாலைகள், சிங்கார
கள், பஸ் வண்டிகள், எங்கு
க்கினும், ஒரு பலகை தொங்கு
, 'வெள்ளையருக்கு மட்டும்'
று எழுதப்பட்டு; இங்கே காண்
மல்லவா, ''பிராமணுளுக்கு
டும்'' என்ற போர்டுகளை;
தப்போல.

ந்த ''மட்டும்'' என்கிற
த்தை, இனவெறியின் சின்னம்
டுமல்ல; வளர்ந்துவரும் நாகரீக
குக்கே, விடுக்கப்படும் ஒரு சவா
தும்.

ானே உயர்ந்தவன், தமது மக்
ா மனிதர் என்கிற இம்மம
யை எதிர்த்து, அறிவொளி
ய நாள்முதல் போராடிவரும்
க மூர்த்திகள், பலப்பலர்.
த வாழ்வில், கருப்பைக் காட்
கேலியும், மஞ்சளுக்கு வணக்
ம், வெள்ளைக்கு சிரம் வணங்க
இருத்தல் கூடாது என்று
க்கமிட்டு, அதற்காக மூர்க்க
காலிழந்தோரும், கண்ணற்
ாலுரும், மிகமிக ஏராளம்.
பாக்கிக் குண்டுகள், தூக்கு
டைகள், தாக்குதல்கள், அந்தத்
லங் கருதா உத்தமர்களின்
ரைக் குடித்திருக்கின்றன.

றபேதம் காட்டி, ''அவன் யார்
யுமா?'' என்ற கேள்வி

யொன்றை எழுப்பி, ''நான் யார் தெரியுமா?'' என்ற திமிர்ப்பதிலொன்றைத் தந்து' ''ஜகமீதிலே யாரே, எம்போல்!'' என்று, அடாணு பாடும் அக்ரகார அம்சங்கள், இன்னும் இருந்து வருகின்றன.

ஏறமுடியாத மலை, தாண்ட முடியாத நதி, செய்யத் தகாத வேலை— இவையெல்லாவற்றையும் கடமையுணர்வோடு செய்துமுடிப்பான்; மலத்தின் நாற்றம் அவனைத் தடுப்பதில்லை. வீதிகளின் குப்பைத்தொட்டிகள் — சஞ்சலமேற்படுவதில்லை, அவனுக்கு. கலப்பையும் ஏரும் தாங்கித் தாங்கி, வடுவேற்பட்டுவிட்ட தோள்கள் — அயர்வதில்லை, அவன். தங்கச் சுரங்கம்—அங்கே தாவிவரும் சாவு! முத்துக்கடல்— கொத்தித் தின்னும் சுறு! காட்டுப் பாதை—சாய்ந்துவிழும் மரம், பாய்ந்துவரும் புலி! இயந்திரச்சாலைகள், அங்கே இரத்தம், வியர்வையாகும் விசித்திரம்!

இத்தனையையும் கண்டு, உழைத்து உருக்குலையும் அவன் மீது பச்சாதாபமும் பரிவும் காட்டார்; 'பாவி' என்றழைப்பார், 'பறையன்' என்று ஏசுவார். 'ஒத்தடா! ஒதுங்கடா!' என்று அலறுவார். இந்தப் பித்துமனங்கொண்டோர், வளர்ந்துவரும் சமுதாய மாறுதல்களை அறியாச் சாக்கடை மனத்தவர்கள்.

இந்த மனநிலை, சாதியையும் பேதத்தையும் நம்பி, அதன்மீது மாடமாளிகையும் 'அப்பமொடு அவல் பொரி' வாழ்வும் பெற்று விளங்கும், இங்குள்ள 'பிரம்மபுத்ரர்களிடம்' மட்டுமல்ல, நாகரீக மறிந்தோனெனக் கொண்டாடப்படும் வெள்ளையர்களிடமும்தலைவிரித்தாடுகிறது.

நேருவின் கைலாகும்; வியாகத்தின் விருந்தும், ட்ரூமனின் திராட்சை ரசமும், பெற்று அவர்களோடெல்லாம் அமர்ந்து அரசியல் ஆலோசனைகள் நடத்தத் தயங்காத ஆப்ரிக்க அரசாங்கம், 'வெள்ளையருக்கு மட்டும்' என்கிற வீண் மமதையை வளர்த்து வருகிறது.

கருப்பர்களைக் கண்டால் சீறுகிறது—பாய்கிறது — கொல்கிறது!

இந்த அக்கிரமத்தால் அவதிப்படும் மனித இனத்துக்காக, முதன் முதலில், அறப்போர் செய்தவர் மறைந்த உத்தமர் காந்தியடிகள் ஆவார்.

ஆப்ரிக்க நாட்டின் வரலாற்றிலே, மகத்தான கிளர்ச்சியையும் மனிதாபிமானத்தையும், உண்டு பண்ணிய மாவீரர், அவர்.

அவருடைய பெயரால், கடந்த வாரம், நாடு முழுமையும் விழா கொண்டாடினராம் — தமிழ் நாட்டு காங்கிரஸ் கட்சியினர்.

''காந்தி ஜயந்தி''—தொண்டரும்

பட்டிருக்கிறது. ஒரு நல்ல கொள்கையைப் பெரிதென எண்ணிப் போர் புரிந்த அந்த உத்தமரின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடியிருக்கும் விதம்பற்றி, பல ஊர்களிலிருந்து நமக்குத் தகவல்கள் வந்துள்ளன.

அவைகளை நோக்கினுல் பரிதாபமாகஇருக்கிறது, நமக்கு,

உத்தமர் ஒருவரின் விழாவை நடத்த வந்த அவரது 'சிஷ்யகோடிகள்'—அப்படிச்சொல்லிக்கொள்ளுகின்றனர்!—பேசிய பேச்சுகள், வீசிய வார்த்தைகள், அவரதுகொள்கையைப் பற்றி அல்ல.

ஆப்ரிக்காவிலே அவர் நடாத்திய அறப்போர், இந்திய மண்ணிலே அவர் புரிந்த அகிம்சைப் போர், மதவெறியை மாய்க்கத் தன்னையே தத்தம் செய்த அவரது தியாகம், நவகாளியாத்திரை, தண்டிப் பயணம், குண்டடி பட்டு வீழ்ந்த சோகம்—இவையெதைப் பற்றியும் பேசப்பட வில்லையாம்.

பெயர், "காந்திஜி ஜயந்தி"—ஆனுல் நடைபெற்றதோ, நம்மைப் பற்றிய வசைபுராணங்கள்! மிரட்டல்கள்!! பல இடங்களிலே, அந்த அகிம்சா வீரரின், திருநாளில் பலர், 'குப்பைகூளங்களாகக் காட்சியளித்தனராம்—பேசினராம்!

"திராவிடக் கட்சிக் காரர்களை என்ன செய்வோம் தெரியுமா?"

"சட்டமும்சர்க்காரும் எங்களிடமிருக்கிறது. ஒரே உத்தரவு! போதும். தீர்த்துக் கட்டி விடுவோம்."

என்னவோ, எலியும் கொசுவும் போல எண்ணிக் கனைத்திருக்கின்றனர்; பாபம், வேறெதைத் தான் பேசத்தெரியும்? அதிலும், நம்மைத் திட்டிப் பேசுவதில் எவன் 'திறமைசாலியோ'(!) அந்த நபருக்குத் தானே இன்று அங்கு பண அபிஷேகம்! பாமரிப்பு!! எல்லாம்!!!

இன்னெரு ஊரில், காந்தி ஜயந்தியில் ஒரு எம். எல். ஏ.—காங்கிரஸ்—பேசினுராம், பொதுமக்களே வரும் தேர்தலில் எங்களையே ஆதரியுங்கள் என்று. உடனே, அவ்வூர் மக்கள் அவரைக் கேட்டனராம். மக்களுக்கும், அந்தப் பிரமுகருக்கும் நடந்த கேள்வி பதில்கள்:

"உம்மைத்தேர்ந்தெடுத்தோமே, நீர் எங்களுக்காக என்ன செய்தீர்?"

"ஒன்றும் செய்யவில்லை! உண்மை தான். ஆனுல் என்னைப் போன்ற எத்தனையோ எம். எல். ஏ.க்கள் ஆயிரமாயிரம் லஞ்சம் வாங்கினுர்கள். நான் அது மட்டும் செய்யவில்லை."

"நீர், சட்டசபையில் எத்தனை முறை பேசியிருக்கிறீர்?"

"உண்மை. நான் ஒரு முறை கூடப் பேசவில்லை தான்."

"பிறகு, எப்படி வோட்டு கேட்கிறீர்!"

பாபம், அந்தஅப்பாவி எம்.எல்.ஏ. விழித்தாராம்! கேள்வி கேட்டவர் எந்தக் கட்சியையும் சாராத் ஒரு பெரியவர். என்ன, செய்ய முடியும்? தாக்கிப் பேசவும் வழியில்லை, வச்குமில்லை. ஆகவே, அடுத்த தேர்தல் 'பிரசங்கி'யை பேச—அல்ல! அல்ல" ஏசச் சொல்லியிருக்கிறுர்.

* * *

மனித வாழ்வுக்காப் பாடுபட்டு தன்னையே தியாகம் செய்த ஒரு நல்லவரின் நாளை, இவ்வளவு அலங்கோலத்தோடு, கொண்டாடியிருக்கிறுர்கள்; அவரது 'நாமத்தைச்' சொல்லியாவது கூட்டப் கூட்டலாம் என்றெண்ணி, அதிலும் வாலறந்த நரி போலயிருக்கிறுர்கள்! அவரது 'பரம்பரை' என்று சொல்லித்திரியலாம் என்கிற ஆசை — அதையும் தங்கள் காரியசித்திக்குப் பயன்படுத்தும் புத்திக் கூர்மையுமில்லை! சாதுர்யமுமில்லை!!

இவ்வளவு கேவலமாக, ஒரு உத்தமரின் திருநாளைக் கொண்டாடியிருக்கும் 'தேர்தல் தியாகிகளின்' திருவிளையாடல்களைப்பற்றி எண்ணும்நேரத்தில் செந்தேன்பாய்வது போல செய்தியொன்று கிடைக்கிறது.

அதுவும் காந்தியடிகளின் திருக்குமாரர்மூலம் அத்தகவல் வெளியாயிருக்கிறது.

தந்தையைப்போல் தனயன் என்கிற பெருமைக்குத் தன்னை ஆளாக்கிக்கொண்டிருக்கிறுர்.

காந்தியடிகளின் புதல்வர்களில் ஒருவரான மணிலால் காந்தி, தன் தந்தை காட்டிய வழியில் நடந்து செல்கிறுர்.

ஆப்ரிக்காவில் நிறவெறியை எதிர்த்து அத் திருக்குமாரர் அறப்போர் புரிந்து வருகிறுர்.

52 வயதான மணிலால் அவர்
ஜோஹன்னஸ்பார்க் நகரிலே,
டர்களின் துடுக்கை அடக்கும்
னதப்பணியிலீடுபட்டு வருகிறுர்

எங்கெங்கு, 'வெள்ளையரு
மட்டும்' என்கிற போர்டு தொ
கிறதோ, அங்கெல்லாம் அவ
அறப்போர் — நடைபெறுகிறது

டர்பன் நகரிலே உள்ளது
பெரிய நூல் நிலையம். அங்கு வெ
ளையர்மட்டுமே நுழையலாம் அ
போய் அமர்ந்தாராம், மணில
வெள்ளையரெல்லாம் வெறித்
ராம்! 'அக்கிரமம்! ஐயோ!' எ
லறி, அதிகாரிகளை அழைத்தன
"வெளியேற்றுங்கள், வெளி
றுங்கள்" என்று கூக்குரலிட்
ராம். இது எதையும் லட்சி
செய்யாமல் புன்சிரிப்போடிரு
ராம், காந்தியின் மைந்தர்.

அதைப்போலவே 'வெள்
ருக்குமட்டும்' இருக்கும்
வண்டியில்போய் அமர்ந்தா
அங்கும் பரபரப்பு! வெறித்தி

நூல் நிலையங்கள், தங்குமி
கள், ஓட்டல்கள். எங்கெங்கு
வெறி தாண்டவமாடுகிறதோ
கெல்லாம், இதுபோலப் போ
அமர்வதும், அவர்கள் அட்டகா
ஸத்தைச் சகிப்பதுமாகத் தனது
யைச் செய்து வருகிறுர்.

'வெள்ளையருக்குமட்டும்' எ
போர்டு தொங்குமிடங்களில்,
பர் போய் அமர்ந்தால், தென்
ரிக்காச் சட்டப்படி, அவர்களைத்
டிக்கலாம்.

ஆனுல் மணிலாலை, கைது
வதுமில்லை! தண்டிப்பதுமில்லை

அதற்குப் பதிலாக, அதிகாரி
வந்து, அவருடைய பெய
குறித்துக் கொண்டு செல்கின்
ராம். அதாவது இப்படியே
தால், அவருடைய நடவடி
நின்று விடும் என்ற எண்ண
டன் எவ்வித நடவடிக்கை
எடுப்பதில்லையாம்!

இந்த முறையினுல், அவ
அறப்போரைத் தோல்வியுறச்
யலாம் என்பது அதிகாரிகள்
ணம்.

ஆனுல் மணிலாலோ, "த
தனியாகவே இக்கொடுமை

11-ம் பக்கம் பார்க்க

கைபாக்ஸ்கள்!

தேம்ஸ் நதிதீரம், உருகும் பனியால் நிறைந்திருந்தது.

குளிரால் கிழவர்கள் நடுத்தனர். கம்பளிகளுக்குள் புகுந்துகொண்டனர்.

வாலிபர்களோ, அந்த இளங்குளிலே இன்பம் தேக்கப்பட்டிருக்கும் இடத்தை நோக்கி யாத்திரை செய்வதுபோல நடந்தனர்.

அவர்கள் முகத்திலே களிப்பு கூத்தாடிற்று.

அவர்கள் ஒரு விழா கொண்டாடக் கூடப்போகிறார்கள். அங்கே எல்லோரும் கூடி மகிழப் போகிறார்கள்!

அந்த மகிழ்ச்சியினால் குளிரும் குதூகலம் தந்தது! இருட்டும் இன்பத்தை மூட்டிற்று!

குறிப்பிட்ட இடத்திலே கூடினர். கூவினர்.

காகிதத்தால் செய்யப்பட்ட பூதம் ஒன்றை தூக்கி நிறுத்தினர். எரித்தனர்.

கைபாக்ஸ் விடாதீர்கள்! கொளுத்துங்கள்! கொளுத்துங்கள்!

இப்படிக் கூவினர். கூவிடும் பொழுதே கேலியோடு கைகளைத் தட்டி ஆரவாரித்தனர்! கிண்டலோடு கெக்கொலித்தனர்!

காகித உருவத்தை கைபாக்ஸ் என்றழைத்தனர்! கொளுத்தினர்!

கைபாக்ஸ் என்ற பெயரே அவர்களுக்கு கசப்பாக இல்லாவிட்டால் அந்தக் காகித பூதத்தை எரித்து தங்கள் ஆத்திரத்தைக் காட்டியிருப்பார்களா ஆண்டுதோறும்?

கைபாக்ஸ், அப்படி என்ன செய்தான்? அவர்களை வெறிகொண்டு எரித்திடச் செய்கிற அளவு வேதனை வளர்த்தானே! ஏன்?

ஆங்கில நாட்டுச் சரித்திரத்திலே ஒரு கை சூழ்ந்த ஏடு, கைபாக்ஸ் நிகழ்ச்சி.

* * *

கைபாக்ஸ் குரூபியல்ல, அழகன். கோழையல்ல, வீரன். ஆனாலும் எரித்தனர்!

அவன் யார்க்ஷயர் குடும்பத்துக் குலவிளக்கு. நல்ல குணாளன் என்று கூறுவாரும் உண்டு. அவனைத்தான் அப்படி அவன் வழிவந்தோர் பழித்தனர். அவன் உருவத்தை தீயிலிட்டு, திருவிழா நடத்தினர்!

அவன் வாலிபனாக இருந்த பொழுது, ஆங்கில நாட்டை ஆண்ட மன்னன் முதலாம் ஜேம்ஸ்.

மன்னன் புராடஸ்டண்ட் மதத்தவன்—அந்த மதத்தை பரப்பும் ஆர்வத்தில் மற்றவர்களை ஒடுக்கினான்

கண்டான் கைபாக்ஸ். மனம் நொந்தான்.

அவன் உள்ளத்திலே, கத்தோலிக்க மதம் ஆழப் பதிந்திருந்தது. அந்த நம்பிக்கை வெறியாகவே மாறிவிட்டது.

கிருத்துவ மதத்தின் மூடக் கொள்கைகள் முழுவதும் நிறைந்தது கத்தோலிக்க மதம். என்றாலும் கைபாக்ஸால், தான் தழுவிய மதத்தை, ஆளவந்தவர்கள் அழிப்பதை சகிக்க முடியவில்லை.

துக்கித்தான், துடித்தான் அவன் தூண்டிவிட்டான் இன்னொருவன். குத்திவிட்டு வேடிக்கை பார்த்தான் மற்றொருவன்.

கேட்ஸ்பி என்றொரு மதகுரு ஏவி விட்டான்.

"கைபாக்ஸ், நீ வீரன்தானே!"

"என் வாளும், தோளும் விடை சொல்லும் இதற்கு"

"வீரன்தான் கைபாக்ஸ், அந்த வீரம் வீணாகிறதே என்றுதான் வருந்துகிறேன்"

"நான் வீணனல்ல!"

"வீணனல்லவென்று வீணாக பேசாதே. காரியத்தில் காட்டு, வீரனென்று உன்னை நான் பாராட்டுவேன், பிறகு."

"விரைந்து சொல், நான் செய்யத்தவறிய காரியத்தை!"

"நீ கொண்டாடும் மதமென்ன?"

"கத்தோலிக்க மதம்"

"அந்த மதத்தை அழிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்கிறார்களே, ஆளவந்தார்கள் இதனைப் பார்த்துக்கொண்டு உன் வாளும் தூங்குகிறது. தோளும் துவண்டு கிடக்கிறது!"

"ஆம், ஆளவந்தவர்கள் புராடஸ்டண்ட் மதத்தை ஆதரிப்பவர்களாக இருக்கட்டும். அதற்காக நம் மதத்தை ஆதரிப்பவர்களைத் தடுப்பது அக்கிரமம். இதற்கு என்வாள் பயன்படவேண்டும்."

"கைபாக்ஸ், கவனமாகக் கேள். அவர்களை ஒழிக்கவழி வாளல்ல — அவர்களைக் கூண்டோடு ஒழிக்க வேண்டும். அதற்கு......"

"பலவழிகளில் மிகச் சிறந்தது ஒன்றுண்டு......ஆனால்——"

"சுற்றிவளைக்கவேண்டாம்சுருக்கமாகச் சொல்" என்றான்.

"சதி செய்! சூழ்ச்சி, அதுவே நமது மீட்சிக்கு வழி!" என்றான்.

கைபாக்ஸ், இந்த உரையாடலுக்குப்பின்னால் நடமாடும் அபாயக் குறியாகவே தென்பட்டான்.

சதி! சதி! சதி! இப்படியே இரவு பகல் யோசித்தான்.

ஆளவந்தவர்களை, கூண்டோடு அழிக்க ஒரு திட்டம் வேண்டுமென்று சிந்தித்தான்! சிலருடன் ஆலோசித்தான்! கடைசியில் பயங்கர முடிவிற்கு வந்தான்!

பயங்கர முடிவுதான்! ஆனால் அவன் அதனைக் கண்டு பயப்படவில்லை!

ஆளவந்தவர்களின் ஒரு அணு கூட உயிரோடு பிழைக்கவிடக் கூடாது என்பது அவன் திட்டம்!

அதற்காக அவன் வந்த முடிவுதான், ஆளவந்தவர்களாக வந்தவன் எவர்கள் அனைவரையுமே நடுங்கச் செய்துவிடும்.

சட்டசபை மண்டபத்தை இடிக்க வேண்டும்! அந்த மணி மண்டபம் மண்மேடாக வேண்டும்!

உள்ளே செல்லும்சட்டசபையை அலங்கரிக்கும் உல்லாசபுத்திரர்

லாபர்கள் கூண்டோடு சாகவேண்டும்!

கைபாக்ஸ் பயங்கர முடிவிற்கு வந்தான்.

எல்லோரும்கூடியிருக்கும் நாளில் சட்டசபை மண்டபத்தை இடிக்க வேண்டும். அதுவரை, அவன் எவரும் மாற்றமுடியாத தீர்மானத்திற்கு வந்துவிட்டான்!

அதற்கு வழிதான் அவனுக்குத் தெரியவில்லை!

யோசித்தான்! யோசித்தான்! யோசித்துக்கொண்டேயிருந்தான்!

சட்டசபை மண்டபத்தைச்சுற்றி வந்தான், பக்தர்கள் கோயில் வலம் வருவதுபோல!

நவம்பர் 5, அவனுல் மறக்க முடியவில்லை!

ஏனெனில் அந்த நாளில்தான் சட்டசபை கூடுகிறது

பார்லிமெண்ட் கூடுகிறது என்றவுடன் அவன் மனம் பட படத்தது. அவனுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று ஆர்வந் தாக்கத் தாக்க உணர்ச்சியால் துள்ளிக் குதித்தான்!

அந்த மன்றமண்டபத்தைச் சுற்றி ஆராய்ச்சி செய்தான்.

திடீரென அவன் மனதிலே எண்ணம் மின்னலிட்டது.

பார்லிமெண்ட் மண்டபம், அதன் கீழே பயங்கரச் சுரங்கம்!

சட்டசபை மண்டபத்திற்கு கீழ் சதிக்கிடங்கு!

பார்லிமெண்ட் மண்டபத்தினடியிலுள்ள இடத்தை வாங்கினான்.

அதில் வெடி மருந்துகளைச்சேர்த்தான்.

தினந்தினம் இதே வேலைதான் அவனுக்கு! எவ்வளவு இரகசியமாக வெடிமருந்துகளைச் சேகரிக்க முடியுமோ, அவ்வளவையும் அந்தகிடங்கில்கொண்டு நிரப்பினான்.

நவம்பர் 5, அவன் மனதை வாட்டிக்கொண்டேயிருந்தது.

அந்த நாளை அவன் நினைக்கும் பொழுதே அவன் இதயம் வீங்கி விட்டது!

நவம்பர் 5-ல் பார்லிமெண்ட் மண்டபத்தில் அவனது விரோதிகள் எல்லோரும் கூடியிருப்பர்.

அவர்கள் அங்கே கூடுகிற நேரத்தில்; கைபாக்ஸ் வெடிமருந்து கிடங்கிற்கு ஓடுவான்.

அவர்கள் வார்த்தைகளை வீசுவர் மண்டபத்தில்! அவன் தீப்பந்தத்தை வீசுவான், வெடி மருந்துக் கிடங்கில்!

வெடிப் பிடிக்கும்! மண்டபம் இடியும்! அவர்கள் அலறித்துடித்து அங்கேயே சாவர்! அந்தக் கோரக் காட்சியை அவன் பார்த்துச் சிரிப்பான்!

இப்படி அவன் எண்ணமிட்டபடியே திரிந்துகொண்டிருந்தான்.

ஆனல், அவன் எண்ணம் நிறைவேறும் முன் பிடிபட்டான். வெடி வெடிக்கவில்லை. மண்டபம் இடியவில்லை!

* * *

இங்கிலாந்தில், ஆட்சி முறை வலுவாக இருந்த நேரத்தில்தான் கைபாக்ஸ் தோன்றினான்!

அற்பமத வெறிகாரணமாக, பார்லிமெண்ட் கூடும் மணி மண்டபத்தையே இடிக்கத் திட்டமிட்டான்!

அவன் சதி செய்த நாளை இன்னமும் மறக்கவில்லை உலகம்.

நவம்பர் 5ஐ, நினைவில் வையுங்கள் என எச்சரிக்கைக்குரல் எழுப்புகிறார்கள்.

நாமும் அத்தகைய எச்சரிக்கை ஒலியை எழுப்புகிறோம் காங்கிரசாட்சியினரை நோக்கி!

ஐந்தாண்டுக் காலம் அவர்கள் ஆட்சி நடந்திருக்கிறது.

இதில் நடந்த அலங்கோலங்கள் அனந்தம்.

இந்த அக்கிரமங்களைச் சகித்துக் கொண்டவர்கள்தான் இந்த நாட்டு மக்கள்.

அவர்களுக்கு முன்னல் மீண்டும் ஓட்டு கேட்க முனைந்துள்ளனர்.

இதைப் பார்க்கிற பொழுதுதான் கைபாக்ஸின் கவனம் வருகிறது.

கைபாக்ஸ் உன்னத லட்சியங்கொண்டு அறப்போர் நடத்தியவனல்ல! அற்ப மதவெறியால் தூண்டப்பட்டு சதிவேலையிலீடுபட்ட சாதாரண மானவன் தான்!

மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னலேயே, பாராளுமன்றத்தை வெடி வைத்து தகர்க்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது கைப[illegible]வுக்கு.

இந்த நாளில், ஆட்சி மு[illegible] வலுப்படாத இந்திய ஆட்சியி[illegible] மதவெறியைவிட பன்மடங்கு ச[illegible]யுள்ள பசியை வளர்த்து, அதனை[illegible] வெறியாக விரித்துள்ள இந்த நே[illegible]தில் கைபாக்ஸ் கவனம் வருவ[illegible] இயற்கைதானே!

மக்களுக்கு சட்டசபை[illegible]யையே இடித்துத் தள்ளலாமா எ[illegible]கிற அளவு ஆத்திரம் வளர்ந்துள[illegible] நேரம்! இந்த நேரத்தில் அவர்க[illegible]டமே ஓட்டு கேட்கிறார்கள்!

மக்கள் கைபாக்ஸ்களாகியிருக்[illegible] கூடும், முன்னரே. நாம் தடுத்[illegible] நிறுத்தி வருகிறோம், இன்னமு[illegible] அரசியல் கண்ணியத்தை அவ[illegible]களுக்கு எடுத்துக் காட்டி மக்க[illegible] மக்களாக வைத்திருக்கிறோம்.

அவர்களை கைபாக்ஸ்களாக்குவ[illegible] எளிது! இதை மட்டும் ஆளவந்தா[illegible] கவனத்தில் வைக்க வேண்டும்!

கேடஸ்பியாக நம்மால் முடியும்[illegible] தூண்டி விட நமக்குத் தெரியும்[illegible] ஆனல் செய்ய வில்லை. ஏன்? அ[illegible]சியல் கண்ணியம் நம்மைத் தடு[illegible]கிறது.

இதனைக் காங்கிரசார் புரிந்[illegible] கொள்ளாமல் புலம்புகிறார்கள[illegible] பொதுக் கூட்டங்கள் என்றால் மு[illegible]சந்தி மொழியிலே முழங்குகிறா[illegible]கள்!

* * *

கேடஸ்பியாவது, மதவெறியை[illegible] தூண்டி விட்டு, வெடி மரு[illegible]துச் சதியைச் செய்யத் திட்டமி[illegible]டான். நமக்குத் தூண்டிவிட செய[illegible]களா இல்லை, இந்த ஆட்சியில்! இவ[illegible]கள் தொட்டது துலங்கியதில்லையே[illegible] தொடாததும் எதுவு மில்லையே[illegible] இவர்களின் உணவுக் கொள்கை[illegible]யொன்றை வைத்தே இவர்க[illegible] எதிர்த்து, மக்களை கைபாக்ஸ்களா[illegible] மாற்ற முடியாதா? மத வெறியை[illegible] விட பசி வெறி பயங்கரமானதா[illegible] இருந்தும் செய்ய வில்லை.

கேடஸ்பிக்கு, ஒரு கைபாக்[illegible] கிடைத்தான்! ஆனல், நமக்கு திரு[illegible]பிய பக்கமெல்லாம் கைபாக்ஸ்க[illegible] கிடைப்பார்கள்! ஏனெனில் இவ[illegible]களின் கொடுங்கோலால் நொந்[illegible]

(9-ம் பக்கம் பார்க்க)

சுழல் விளக்கு

★

த்தியர் செய்யும் சத்தியம்

காளிதாசர் தினம் சென்னையில் கொண்டாடியபொழுது, தலைமை வகித்த, உயர்நீதி மன்ற நீதிபதி சத்திய நாராயணர் சிந்திய சத்திய வார்த்தைகள் இதோ! காளிதாசர் சிருஷ்டித்த மகாராஜாக்கள், சத்புருஷர்கள், சத்தியவந்தர்கள்! ஏன் தெரியுமோ? மக்களுக்குத் தொண்டு செய்தது, சட்டமியற்றி, அதன்படி ஆட்சி நடத்தியதெல்லாம் சாதாரணம்! அந்த மன்னாதி மன்னர்கள், ஜீயர்கள், ஜீவன்முக்தர்கள், தபசிகள், ரிஷிகள் காட்டிய வழி நடந்தார்கள்! அதனால்தான் அவர்கள் சிறந்தவர்கள்! மன்னர்கள், தபசிகளிடம் உபதேசம் பெற்றனர்! உயர்ந்தனர்! மணிமுடி, ஜடா — முடிக்குப் பணிந்தது! அதனால் உன்னத நிலையடைந்தது, நாடு! இப்படி உளறி... இல்லை......இப்படி சத்கதா காலட்சேபம் நடத்தியுள்ளார், நீதி வழங்கும் வேலையை விட்டு வீந்து! அத்தகைய தபசிகள் தோன்றும் வரை, இந்தியாவில் தர்மம் தழைக்குமாம்! அந்த முயற்சியிலே ஈடுபட வேண்டுமாம்! தபசிகள் தயார் செய்யும் வேலையிலே இறங்கிவிட்டால் நாடு உருப்பட்டுத் தொலைக்குமாம்! இனி என்ன வேலை? இதுவரை பிறந்த மகரிஷிகளும், தபசிகளும் ஆறு அவுன்சிலே விட்டிருக்கிறார்கள்! இனிமேல் வரும் தபசிகள் ஆறு அரிசி, ஐந்தரிசி என்று எண்ணிக் கொடுக்கிற நிலைக்கு நிச்சயம் கொண்டுவந்து விடுவார்கள்! இது சத்தியம்! சத்திய நாராயணர் சத்தியம் செய்து சொல்கிறபொழுது சந்தேகமென்ன!

கடவுளுக்கே வெளிச்சம்

திருவாங்கூர் — கொச்சி பகுதிகளில், ஏனோ தெரியவில்லை—ஆண்டவன்மார்களுக்கு அதிக ஆபத்து வளர்ந்து வருகிறது! அங்கங்கே, ஆலயங்களிலே, திடீர்க் குழப்பங்கள், திடுக்கிடும்சம்பவங்கள், மயிர்க்கூச்செரியும் தீரச் செயல்களைக் கண்டு ரசிக்கிறார்களாம் கடவுள்கள்! அய்யப்பனார் கண்டசம்பவம் தான் ஆரம்பமாம்! அதற்குப் பின்னால் தொடர்ந்து இது நடைபெறுகிறதாம்! இதனை, எவரோ செய்கின்றனர்! அவர்கள் எந்தக் காரணத்திற்காகச் செய்கிறார்கள் என்பது காணாமற்போகிற கடவுளுக்குத்தான் வெளிச்சம்! ஆனால் இதோடு, அவர்களை, இவர்களை ஒட்டி, தங்களை பலப்படுத்தப் பார்க்கிறார்களாம் சிலர்! அது கடவுளுக்கே அடுக்காது! ஏனெனில் அவருக்குத்தான் அதனை யார் செய்தார்கள் என்று தெரியுமே! சில இந்துக்களல்லாதவர்கள் இப்படிச் செய்கிறார்கள் என்று கூறுகிறார்கள்! ஆனால், அரசியல் நோக்கத்திற்காகப் பயன்படுத்தாதிருக்க வேண்டுகிறார்கள். இது குறித்து மாஜிகள் சிலர் ஒரு மகஜர் அனுப்பியது நினைவிலிருக்கலாம்! இப்பொழுது, திருவாங்கூர்—கொச்சி முதல் மந்திரி கேசவன் டெல்லி சென்று மத்திய சர்க்காரிடம் மகேசன் விஷயமாகப் பேசித் திரும்பியுள்ளார்! உள்நாட்டு மந்திரி, சமஸ்தான மந்திரி இலாகா அதிகாரிகளிடம் விஷயங்களை எடுத்து விளக்கினாராம்! கடவுளைப்பற்றி கவலைப்படாத நமக்கேன் இந்த வீண்வேலை? அண்டபகிரண்டத்தையும்படைத்த ஆண்டவனுக்கே அந்த விஷயம் அர்ப்பணிப்போமாக!

துர் நாற்றமடிக்கிறது!

காங்கிரஸ் இயக்கம் சாதித்த சாதனைகளிலே மதுவிலக்கு மகத்தானது என்று தேர்தல் மது வருந்தி முழங்குகிறார்கள். மதுவிலக்கோ, விதிவிலக்கு பலபெற்று, வீதியெல்லாம் துர்நாற்றமடிக்கிறது! மதுவிலக்கு ஆரம்பமானதிலிருந்து, என்ன புதுமையென்றால், முதலிலெல்லாம் ஊருக்கு ஒரு இடம், மது கிடைக்குமிடமாக இருந்தது. இப்பொழுது, வீட்டிற்கு வீடு, மதுக்கடையாக்கிவிட்டார்கள்! முதலில் குறிப்பிட்டவர்கள் மதுக்கடை குத்தகை எடுத்தார்கள்! சர்க்காருக்கு பணமும் வந்தது, இப்பொழுதோ பணத்திற்குப் பணமும் நஷ்டம் வேலையற்றவர்கள் எல்லோருமே இதே 'புட்டி தூக்கும்' வேலையில் இறங்கி விட்டார்கள்! முதலில் இருந்த குடிவகைகளைவிட இப்பொழுது குடிவகைகள் பெருத்துவிட்டன! குடியர்கள் விஞ்ஞானிகளாகி விட்டார்கள்! புதுப்புதுக் குடிவகைகளைக் கண்டுபிடித்து விட்டார்கள்! இப்படி மதுவிலக்கு நாற்றமடிக்கிறபொழுது, 'ஊத்தை' வாய் திறந்து ஓலமிடுகிறார்கள்! ஊத்துமலை ஜமீனைச் சேர்ந்த கரிசல் குளத்திற்கருகில் மதுவிலக்கு அதிகாரிகள் புகுந்து கண்டுபிடித்து விட்டார்களாம்! 70-காலன் சாராய ஊரலும் 4-காலன் வடித்த சாராயமும், சாராயம் வடிக்கும் கருவிகளையும் கைப்பற்றினார்களாம்! பெண்கள் உள்பட 18-நபர்களையும் கைது செய்தனராம்! தேர்தல் பீரங்கிகளுக்கு தீனியாம் இந்தச் செய்தி! இதைக் கேட்ட பிறகு இனி காங்கிரசுக்கேதானே உங்கள் ஓட்டு! மதுவிலக்கு வந்துவிட்டதே—இனி என்ன கவலை!

மாநில மாநாடு நிதியளிப்பு

சென்னையில்

6—10—51-ல் நடந்த
சென்னை மாவட்டக் கழக செயற்குழு
கூட்டத்தில்
பொதுச் செயலாளரிடம்
ரூ. 1000
அளிக்கப்பட்டது.

திருச்சியில்

9—10—51-ல்
நடந்த
பொதுக் கூட்டத்தில்
பொதுச் செயலாளரிடம்
ரூ. 2000
அளிக்கப்பட்டது.

திராவிடநாடு

ஞாயிறு] 14—10—51 [காஞ்சி

"மாரிஷஸ் பிரயாணம்"

★

சுரண்டல் ஒழிந்தது! சூழ்ச்சி வீழ்ந்தது! சுதந்திரம் செழித்தது! அலையோசையிடையே, இந்த விடுதலை இசையும் முழங்கியபடியிருந்தது.

சுரண்டல் ஏகாதிபத்திய சகாப்தம் முடிந்தது என்று கூறியபடி, மாரிஷஸ் கப்பல், அபடான் கடற்கரையை விட்டு அசைந்தது, நகர்ந்தது!

அதில் மூந்நூறு பேர் முகத்தைத் தொங்க விட்டபடி நின்று கொண்டிருந்தனர்.

அவர்கள் முகத்திலே சோகம், உள்ளத்திலே பயம்!

அவர்கள் பாரசீக எண்ணெய்த் தொழிலகத்திலிருந்த ஆங்கில பணியாளர்கள். அவர்களைத்தான், வெள்ளையர்களே, வெளியேறுங்கள், எங்கள் வேதனை தீரட்டும், என்று வெளியேற்றினர்!

மூந்நூறு பேர்! சுரண்டல் ஏகாதிபத்தியத்தின் கடைசி தூதுவர்கள்! பொருளாதாரச் சூதுச் சுரங்கத்தின் கடைசி காவலர்கள்! அவர்களை வெளியேற்றினர்!

மூந்நூறு பேர்கள்! ஆனால் பாரசீக பொருளாதாரச் சரித்திரத்தில் முக்கிய இடம்பெற்று விட்டார்கள்!

பாரசீக எண்ணெய்க்கிணறு தகராறு ஆரம்பமாகி, கடைசியாக, விட்டுவைத்திருந்த அந்நியர்கள், மூந்நூறுபேர்! அவர்களும் வெளியேற்றப் பட்டார்கள்!

கப்பல் புறப்படுவதற்கு முன்னால் ஈரான் சேனை வந்திருந்தது.

ஈரான் தேசத்து அதிகாரிகள் இந்தக் காட்சியைக் கண்டனர், மௌனமாக நெடுநேரம்! பிறகு நீண்ட பெருமூச்சு விட்டனர்.

கப்பல் நகர்ந்த நேரத்தில், கரையிலிருந்த ஓரிருவர் கையசைத்த பொழுது, சுரண்டல் கொள்கைக்கு கடைசி வணக்கம் செலுத்துவது போலிருந்தது.

கப்பலுக்குள் கிளம்பிய கீதமும், சுரண்டிப் பிழைப்போருக்கு பாடப்படும் மரணகீதம் போலவே தெரிந்தது.

ஈரான் தேசத்து மக்கள் ஏராளம், சுரண்டல் சூதுக்காரர்களின் கடைசி பயணத்தைக் கண்டனர்.

மூன்று மணி நேரத்திற்குள் மாரிஷஸ் பயணம் முடிந்தாலும், உலக மக்கள் மனதிலே பதிந்து விட்டது!

மாரிஷஸ் கப்பலின் பயணம், சுரண்டல் ஏகாதிபத்தியம் அஸ்தமித்து விட்டது என்பதை எடுத்துக் காட்டி விட்டது.

இந்த சம்பவம் உலக வரலாற்றிலேயே, மிக உன்னதமானது.

* * *

பாரசீகம் எண்ணெய்க் கிணறுகளுக்கு பெயர் பெற்ற தேசம்.

பாரசீகர்கள் பலமிழந்திருந்த நேரத்தில், வெள்ளையர்கள் நுழைந்தனர்!

அங்குள்ள எண்ணெய்த் தொழிலைக் கைப்பற்றினர். தொழில் துறையில் தாங்களே ஆதிக்கம் செலுத்தினர்.

ஏமாந்தகாலத்து, ஏற்றங்கொண்ட பரங்கியர்களின் வாழ்வு மந்தகாசமாக இருக்கக்கண்ட, சொந்த நாட்டு பாரசீகர்கள்யோசிக்கத் தொடங்கினர்.

வந்தவன் வாழ்கிறான்! இந்த நாட்டு சொந்தக்காரர்கள் வாழ முடியாதவர்களாக இருக்கிறார்களே! ஏன்? சிந்தனை இப்படி உருவெடுத்தது முதலில்.

பரங்கியர்கள் வாழத் தெரிந்தவர்கள். முதலில் கிடைத்த பதில் இது.

பாரசீகர்கள், பாருள்ள வரையிலும், பாழ்பட்டுப் போகப் பிறந்த இனத்தவரா? அவர்களுக்கு வல்லமை யில்லையா? வாழ்ந்த வரலாறு கிடையாதா? வளப்பமில்லையா, அவர்கள் நாட்டில்? என்ற கேள்விகள் பிறந்தன பிறகு.

வாழ்ந்தவர்கள், இடையிலே வீழ்ந்தவர்கள், இன்று தாழ்ந்த[...]கள், முயன்றால் நாளை முன்னே[...] கூடியவர்கள் பாரசீகர்கள், என்[...] பதில்கள் பறந்தன.

பாரசீகர்கள் சிந்தித்தனர்! பரங்கியர்களோ சிரித்தனர்!

பாரசீகத்தில், பல ஆயிரம் மை[...]களுக்கப்பாலிருந்து வந்தவர்களு[...] ஆதிக்கம் கூடாது என்று முதலி[...] நினைத்தனர். பிறகு மெதுவா[...] சொல்லினர். இறுதியில் அது[...] ஈரான் நாட்டு இதய ஒலியாக மா[...] விட்டது!

பாரசீகத்தில் சுதந்திர உணர்[...] பிறந்தது! விடுதலை வேட்கை உ[...] வெடுத்தது.

இதைக் கண்ட பரங்கியர்க[...] துடித்தனர்! தூற்றினர்!

சுதந்திர வேகத்தை, சுயநல[...]கள் கலகம் என்றனர்.

விடுதலை நாதத்தை, வீணர்களின் கூச்சல் என்றனர்.

நாட்டுணர்ச்சியை, நாசகால[...]களின் சதித்திட்டம் என்[...] பேசினர்.

தென்றலை, புயல் என்று கு[...] கூறினர்.

மலர் மணத்தை, மலத்தின் வாடையென்று பொய் பேசினர்.

புனலை, அனலெனக் கூறி, உல[...]கத்தவரின் ஆத்திரத்தை சேர்த்திட முயன்றனர்.

மானை, மந்தியென்று நம்ப[...] சொல்லினர்.

பரங்கியரின் பசப்பு மொழிகளை பாரிலுள்ளோர் நம்பும் காலம் ம[...]யேறிவிட்டது!

பாரசீக மக்கள், தங்கள் நாட்டு[...] தொழில்களில் வெளிநாட்டா[...] ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்[...]கின்றனர். இதிலேதும்தவறில்லை[...] என்று பேசத் தலைப்பட்டனர்.

வெளிநாட்டார் சுரண்டலை நா[...]கள் அனுமதிக்க முடியாது என்[...] கண்டிப்பாகத் தெரிவித்து விட்[...]னர். இதில் உள்ள குறையென்ன[...]வென்று பாரசீகத்திற்குப் பரிந்[...] பேசுவோர் தொகை வளர்ந்தது.

சுரண்டல் சூரர்களுக்கு இத[...] எப்படி பிடிக்கும்?

ஆகவே மாய்மாலங்கள் பல புரி[...]தனர். மாரீசத்தனங்கள் ஏரா[...] செய்தனர்.

ஏதும் பலன் தரவில்லை. எதுவும் பாரசீக மக்களின் எண்ணத்தை மாற்றமுடியவில்லை.

பாரசீகப் பிரதமர் மொஸேதாக் தலைமையில், பாரசீகர்கள் ஒன்று கூடினர். தங்களின் குரலை உயர்த்தி கூறிவிட்டனர். அந்தக் குரலில் கலந்திருந்த உறுதியையும், தீவிரத்தையும் கண்ட உலக நாடுகள் வியந்தன.

மொஸேதாக் மக்கள் பிரதிநிதி. அவர்கள் குரலின் எதிரொலி.

வெட்டவெளிகளிலேநின்றுபேசி, மக்களின் சம்மதம் பெற்று, சட்டசபையிலேயும் தீர்மானமாக்கினார்.

பாரசீக தேசத்து எண்ணெய்த் தொழிலைத் தேசீயமயமாக்கப் போகிறோம். பாரசீக சர்க்காரின் நேர்பார்வைக்கு கொண்டு வரப்போகிறோம். ஆங்கில ஆதிக்கம் இனி கூடாது, செல்லாது என்று அறிவித்தார்.

ஆங்கில வணிகர்கள் அடம் செய்தனர். ஆனால் அவர் விடவில்லை.

எங்களிடமேதான் இந்தத் தொழில் இருக்கவேண்டும் என்று பிடிவாதம் செய்தனர்.

மொஸேதாக் நிலைமையை விளக்கினார். ஆனால் அவர்கள் கேட்கவில்லை.

மக்களின் ஆத்திரம் எல்லை கடந்தது.

அங்கங்கே, குழப்பங்கள், குமுறல்கள், கொந்தளிப்புகள்!

பரங்கியர், பாரசீகர் சுமுகமாக முடிவிற்குவர பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. மொஸேதாக் அத்தகைய வாய்ப்புகளை அளிக்கப் பின்வாங்கவில்லை. இருந்தும் ஆங்கில அரசு தவறிவிட்டது.

வெள்ளைய வல்லுநர்கள் பாரசீகத்திலிருக்கலாம். ஆனால் அவர்கள் ஆதிக்கம் செலுத்தக்கூடாது.

பாரசீகத்தில் அந்நியர் தொழில் துறைகளில் பணியாற்றலாம். ஊதியம் பெறலாம். ஆனால், பாரசீக செல்வத்தைமட்டும் சுரண்டிச்செல்லக்கூடாது.

உழைக்கட்டும், பிழைக்கட்டும்! ஆனால் நாட்டோர் உழைப்பை உறிஞ்சி கொழுக்கக்கூடாது!

பாரசீக நாட்டுச் செல்வம், பாரசீகர்களுக்குத்தான் சொந்தம்!

இதில் பரங்கியருக்கென்ன பங்கு?

இப்படி அவர்கள் பேசியநேரத்திலெல்லாம், முக்கிய ஆதிக்கம் முழுவதும் தங்களுக்குவேண்டும், என்று பேசினர் பரங்கியர்கள்.

இதைக்கேட்ட பாரசீகர்கள் இளகியமனம் இறுகியது. இரும்பாகி விட்டது.

வெள்ளையர்கள் எவருமே, பாரசீக எண்ணெய்த் தொழிலில் பணியாற்றக்கூடாது, வெளியேறிவிட வேண்டும், என்றுமுடிவுசெய்தனர்.

அந்த முடிவின் விளைவுதான் மாரிஷஸ் கப்பல் பயணம்!

* * *

ஒரு நாட்டை மற்றொரு நாடு சுரண்டக்கூடாது, என்ற எண்ணம் மலர்ந்து வருகிறது.

இதனை மொக்கிலேயே கருக்கிவிடப் பார்க்கிறார்கள் ஆதிக்கக் காரர்கள்!

அத்தகைய பேராசைப் பெருந்தகைகளுக்கு, பாரசீகம் தரும் நல்ல பாடம்!

ஒரு நாட்டுச் செல்வத்தை, அந்த நாட்டு மக்கள் பறிகொடுத்தேயிருக்கும் காலம் போய்விட்டது. இப்பொழுது சொந்த நாட்டுணர்ச்சி தீவிரமாகப் பரவி வருகிறது! இதனை அழித்துவிட முடியாதது மட்டுமல்ல, அழிக்க நினைப்போர், மாரிஷஸ் பிரயாணம் செய்யவேண்டி நேரிடும்!

நாம் திராவிட நாடு திராவிடருக்கே என்று முழக்குகிறோம்.

இதற்கு, பாரசீக பின்னணி இசை மிகவும் பொருந்தும்.

சுரண்டல் இயந்திரம், பரங்கியர் உருவிலிருந்தாலும் சரி, பனியா வடிவில் வந்தாலும் சரி—இரண்டும் ஒன்றே!

பாரசீகத்தில் எண்ணெய்க் கிணறுகளில், பரங்கியர் ஆதிக்கம் செலுத்தினர். இன்று விரட்டப்படுகின்றனர்!

திராவிடத்தில், வடவரின் சுரண்டல் இயந்திரத்தின் சக்கரத்தில் சிக்கிச் சிதையாத தொழில் இல்லை!

பாரசீகத்தில் பரங்கியர்! திராவிடத்தில் வடவர்!

பரங்கியர் அங்கே வெளியேற்றப் பட்டனர்!

திராவிடத்தில் வடவர்கள் வாழ்கின்றனர்!

வணிக ஏகாதிபத்தியத்தில் தொடங்கி, அரசியல் ஏகாதிபத்தியம்வரை வளர்ந்தபடியிருக்கின்றனர்.

நம் குரலைக் கேலி செய்வோர், இன்று வேண்டுமானால், வீரர்கள், சூரர்கள் என்று எத்தர்களால் விருது பெறலாம், ஆனால் எதிர்காலம், ஏமாளிகள் என்ற பட்டத்தை அவர்களுக்குச் சூட்டும்.

பாரசீகர்கள், தங்கள் நிலையை விரைவில் உணர்ந்துவிட்டார்கள். திராவிடர்கள் இப்பொழுதுதான் உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள். இதுதான் இருவருக்குமிடையே உள்ள வித்தியாசம்!

பாரசீகத்தில் மாரிஷஸ் பயணம் இப்பொழுது நடந்துவிட்டது! திராவிடத்தில் மாரிஷஸ் பயணம் நடக்கத்தான் போகிறது! பரங்கியர் பாணியில், பனியாக்களும் நடந்து கொள்வார்களானால், அந்த பயணத்தை யாராலும் நிறுத்தமுடியாது!

மாரிஷஸ் பயணம் திராவிடத்திற்கு நல்லதொரு நம்பிக்கையைத் தந்துள்ளது காண மகிழ்கிறோம்.

* * *

வணிக ஆதிக்கம் பீரங்கியைப் போல, அரசியல் எதேச்சாதிகாரம் அதற்குரிய வெடி மருந்து!

பீரங்கி தயாரிப்பவனுக்கு, வெடிமருந்து சேகரிப்பது தொல்லைதரும் வேலையல்ல!

பீரங்கி தயாரிக்க அவன் எடுத்துக்கொள்ளும் முயற்சியிலே, பத்திலே ஒரு பங்கு செலவிட்டாலே, வெடி மருந்து கிடைத்துவிடும்.

இரண்டும் கிடைத்துவிட்ட பிறகு, அவனைக் கண்டு பயப்படுவர், ஊரார்.

பீரங்கிராயர் என்று பெயரிட்டு பாராட்டுவதுபோல பேசித் தப்பிக்க முனைவர்.

ஆகவேதான், வல்லரசு அமைவதற்கு வணிக அரசு முன்னோடும் பிள்ளையாகிறது!

ஏகாதிபத்தியம் பிறப்பதற்கு, வணிக ஆதிக்கம் கருவாகிறது!

எதேச்சாதிகார மாளிகை எழுப்புவதற்கு, வணிகத் துறை ஆதிக்கம் அடிப்படையாக [illegible]

ஆங்கில ஏகாதிபத்தியம் வளர்ந்த வரலாறு இந்த உண்மையைப் புலப்படுத்தும்.

இந்திய உபகண்டத்திற்கு ஆங்கிலேயர்கள் வணிகத்திற்காகத்தான் வந்தார்கள்.

அவர்கள் வந்தபொழுது, எங்கெங்கே வர்த்தக பண்டகசாலைகள் அமைக்கலாம் என்றுதான் எண்ணினர்!

டெல்லியை ஏகாதிபத்திய தலைநகராக மாற்ற நினைக்கவில்லை.

வணிக வல்லரசர்களாக வாழ்வு தொடங்கினர்கள். ஏகாதிபத்திய வெறியர்களாக பிறகு மாறினர்!

பண்டங்களை விற்பவர்களாகத்தான் பரங்கியர்கள் இந்திய வரலாற்றின் ஆரம்ப அத்தியாயத்தில் காணப்பட்டனர். பிறகோ பாராள்வோராக ஆனதைக் கண்டோம்.

வணிகம் தரும் வாழ்வுதான் அரசியல் ஆதிக்கம் என்பது இப்பொழுது விளங்கும்.

இந்த அரசியல் நுணுக்கம், பாரசீகர்களுக்குப் புரிந்துதான், மாரிஷஸ் பிரயாணம் நடத்தினர்.

திராவிட நாட்டவருக்கு இது புரியாமலேயே போனதால்தான், இன்னமும், டெல்லியின் பிடியிலேயே கிடக்கிருர்கள்.

அடிமைச் சங்கிலி உடைபடாமலிருப்பதற்குக் காரணம், வணிகத் துறையில நாம் ஏமாளிகளாகவும், அவர்கள் எத்தர்களாகவும் இருப்பதால்தான்!

இந்த அரிய உண்மையை எடுத்துக் காட்டிவிட்டது, மாரிஷஸ் பிரயாணம்.

* * *

உலகத்திலேயே மிகப் பெரிய சாம்ராஜ்யமாக இருந்து, உலகநாடுகளின் மதிப்பையும் பெற்றது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்.

உலகத்தின் பல பகுதிகளில் வணிக ஆதிக்கச் சங்கிலியால் குடியேற்ற நாடுகள் பலவற்றைப் பிணைத்து ஆட்சி புரிந்துவந்தது, ஆங்கில ஏகாதிபத்தியம்.

மாநிலத்தில், எங்கள் நாட்டில் ஞாயிறு மறைவதில்லையென்று பெருமைபேசுகிற அளவு பரந்து விரிந்திருந்த சாம்ராஜ்யம்.

எந்தக் கண்டத்திலும், அதன் குரலின் எதிரொலி கேட்கும்.

எங்கு திரும்பினாலும், ஆங்கிலேயரின் ஆட்சி விரல் ஆட்டிய பக்கம் ஆடும் நாடுகள் உண்டு.

அவ்வளவு ஆதிக்கம் நிறைந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்தான், ' மாரிஷஸ் பிரயாணம் செய்துள்ளது.

கேட்கவே, வியப்பைத் தரும் செய்திதான், இது.

ஒரு ஆங்கில அதிகாரி, கப்பலேறுமுன் கூறியதைப் போல, பிரிட்டிஷ ஏகாதிபத்தியத்திற்கு, மற்றுமொரு டன்கர்க்தான், இது.

மாரிஷஸ் பிரயாணம், இதயங் குலுக்கும் செய்தி, இங்கிலாந்து தேசத்தவருக்கு என்றாலும், அவர்களால் ஏதும் செய்ய முடியவில்லை.

அப்படியிருந்தும், ஆங்கில ஆட்சியாளர் பேசும் பேச்சு, உலகத்தின் போக்கைபுணர்ந்தவர்கள் அவர்கள், என்பதை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய பிரிட்டிஷ் மந்திரி பேவான் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கில நாட்டு முதல், பாரசீக எண்ணெய்த் தொழிலில் போடப்பட்டிருக்கிறது என்பது உண்மை. ஆனல் அந்த முதல் போடப்பட்டுள்ள தொழில் எந்த நாட்டிலிருக்கிறதோ, அந்த நாட்டு மக்களுக்கும், அதுபற்றித் தீர்மானிக்கும் உரிமையிலே பங்கிருக்கிறது

ஆங்கில நாட்டின் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர் கூறுகிறார். மாரிஷஸ் பிரயாணம் நடப்பது கண்டும் கூறுகிறார் இப்படி!

* * *

ஏகாதிபத்தியத்திலிருந்து, பிரிட்டிஷ் கூட்டுறவு நாடுகளாக மாறிவிட்டது.

அதாவது ஆதிக்க மனப்பான்மையிலிருந்து ஒத்துழைப்பு இயக்கமாக மாறியிருக்கிறது.

மற்ற நாடுகளோடு ஒத்துழைத்து உலக சுபிட்சத்திற்கும், ஆங்கில நாட்டு வாழ்க்கைத் தரத்திற்கும் பாடுபடுவதே நல்லது.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உலக சக்தி திரண்டுள்ளது.

இத்தகைய மணி மொழிகளைச் சிந்தியவர் சாதாரணமானவரல்ல. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சந்ததியிலே வந்தவர், இன்றைய பிரதமர், அட்லி.

வளர்ந்து வரும் மக்கள் சக்தி, ஏகாதிபத்தியத்தை மோதி உடைத்தெறியும் என்பதாலேயே, தொழிற் கட்சி, ஆதிக்க மனப்பான்மையிலிருந்து ஒத்துழைப்பு முறைக்கு வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரத்திலே இத்தகைய தெளிவுரையை அவர் தந்து கொண்டிருந்தபொழுது, சிலர் பாரசீகத்தில், ஆங்கில தேசமே அவமானப் படுத்தப்பட்டது என்று கூவினராம். அட்லி, அத்தகைய அவமதிப்பு ஏதும் ஏற்படவில்லையென்று அழுத்தந் திருத்தமாக அறிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதமர் பேசுகிறார், ஏகாதிபத்தியம் இனி செல்லாது என்று, சாம்ராஜ்யக் கனவு கலைந்துவிட்டது என்று!

அதுவும் பாரசீகத்தில் மாரிஷஸ் பிரயாணம் நடக்கிற அளவு நிலைமை வளர்வதைக் கண்டபிறகு பேசியுள்ளார்.

இதைக் காண்கிறபொழுதுதான், வடநாட்டு ஏகாதிபத்திய பாதுகாவலர்கள் கவனத்தை கூர்மையாக்க வேண்டும்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைவிட பெரிய ஏகாதிபத்தியம் அல்ல, வடநாட்டு ஏகாதிபத்தியம்.

வடநாட்டு ஏகாதிபத்தியம் இன்று முளைத்த புதிய ஏகாதிபத்தியம்!

பழைய ஏகாதிபத்தியத்தின் பாதுகாவலரே, காலத்தின்வேகத்தை யுணர்ந்து, ஏகாதிபத்திய எண்ணம் இனி இடம் பெறமுடியாது என்று கூறுகிறபொழுது, புதிய ஏகாதிபத்தியகனவு காண்போர் எத்துணை விழிப்போடு நடந்துகொள்ளவேண்டும் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

பாரசீகமாகலாம், திராவிடநாடு! ஆனல், அங்கு மாரிஷஸ் பயணம் நடக்கிற அளவு நிலைமையை முற்ற விடாமல் காரிய மாற்றவேண்டியது புதிய ஏகாதிபத்திய எண்ணங் கொண்டுள்ளோரின் முக்கியமான வேலை.

மாரிஷஸ் பிரயாணம், புதிய ஏகாதிபத்தியத்தினருக்கு இன்றுஎச்சரிக்கை! நாளைக்கு இதுவே அபாய அறிவிப்பு!!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

போனவர்கள் நிறைந்துள்ளார்கள் எங்கும்!

ஐந்தாண்டுக் காலத்தில் யார் தான் திருப்தியடைந்துள்ளனர், பதவியிலுள்ள, அந்தச் சிறு கூட்டம் தவிர! யோசித்துப் பாருங்கள்.

தொழிலாளிகள் துவண்டு போய் விட்டனர், ஆலையிலே வேலை செய்பவனானாலும், கூரைக்குள்ளே தறியோட்டுபவனானாலும், வேதனை தான் விருந்து இந்த ஆட்சியில்!

மாணவர்கள், இழைத்த அநீதி தாங்காமல் இன்னமும் குகையிலே உலவும் புலிகளாக உள்ளனர்.

ஆசிரியர், சம்பள உயர்வு கேட்டு, கேட்டு, வெறுப்படைந்துள்ளனர்.

பெண்கள், சமநீதி கிடைக்காமல் சங்கடப்பட்டுள்ளனர்.

சர்க்கார் ஊழியர்களும், அறப்போர் நடத்தி அலுத்து விட்டனர்,

போலீஸ் அதிகாரிகள், மனம் அறிந்து அநீதியிழைக்கத் தூண்டுகிறார்களே, இந்த ஆளவந்தார், வேலையை உதறித் தள்ளிவிடலாமா என்று யோசித்தபடியுள்ளனர்.

பொதுமக்களோ, பொங்கும் நீரை, கண்களிலிருந்து வடித்தபடியிருக்கின்றனர்.

இவர்களிடம், அவர்கள் தேர்தல் கீதம் பாடுகிறார்கள்! நம்மால் இவர்களைத் திருப்பிவிட முடியாதா?

ஆகவேதான் நாம் எச்சரிக்கை குரல் எழுப்புகிறோம்.

காங்கிரசாரே, கைபாக்ஸ் சர்பம், கவனத்திலிருக்கட்டும் என்கிறோம்!

* * *

சட்டசபையையே இடிக்கவேண்டும் என்ற எண்ணம் வந்தது. அது அபாயத்தின் அறிகுறி.

அத்தகைய எண்ணத்தை வரவிட்டதே போதுமே! அதற்குப் பிறகு என்ன வேண்டுமானாலும் செய்யட்டும்! அதனால் பலனேதுமில்லையே!

ஒருவன் சட்டசபையை இடிக்க வேண்டும் என்று சொல்ல, அதனை மற்றவன் கேட்க, அந்தச் செய்தி பரவத் தொடங்கிற்று என்றவைத்துக் கொள்ளுங்கள்!

ஒருவன் பத்துபேருக்குச் சொல்வான்! பத்துபேர் நூறுபேருக்குச் சொல்வர்! நூறுபேர், ஆயிரம் பேராவர்!

பெரும் ஊராகத் திரளும்! பிறகு, சட்டசபை சாம்பலாகும்!

கைபாக்ஸாகிற அளவு மக்கள் மனம் மரத்திருக்கிற நேரத்தில் தேர்தல் தெந்தினா பாடுகிறார்கள்! அதனால் தான் எச்சரிக்கை செய்கிறோம்!

நாம் ஏதோ காங்கிரஸ் இயக்கத்தை இடிக்கப்பெரியசதி செய்வதாக எண்ணித் தூற்றுகிறார்கள்!

ஆனால் பொது வாழ்வில் அமைதியை நிலை நாட்டி வருபவர்கள் நாம். அவர்கள் நன்மைக்காகவே கூறுகிறோம், நம்மைத் தூற்றுவதை நிறுத்தி, தங்கள் தேர்தல் வீரத்தை மக்களுக்குக் காட்டட்டும் என்று!

நம்மால், மக்கள் கட்டுப்படுத்தப் படுகிறார்கள்! நம்மைத் திட்டுகிறார்கள் என்றால், கட்டு தளர்கிறது என்று அர்த்தம்!

தேர்தல் திருவிழா நடத்துவோர் இந்த உண்மையை மறந்துவிட்டு, உளறிக் கொட்டக் கூடாது!

* * *

காங்கிரசார் இன்னமும் உன்னிப்பாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

கைபாக்ஸ்கள் காங்கிரசுக்கு வெளியிலே உலவுவதாக நினைக்கிறார்கள். அது தவறு.

கைபாக்ஸ்கள் ஏராளம் காங்கிரசுக்குள்ளேயே காட்சிதருகிறார்கள்.

கதர் உடையில் கைபாக்ஸ்கள்! எச்சரிக்கை இது!

எம். எல். ஏக்களில் பலர், ஒரு பிரதமரை, மாற்றி இன்னொரு பிரதமரைக்கொண்டு வருவதற்குள் வெடிமருந்துச் சதியைவிட விபரீதமான சதிகளிலீடுபட்டுள்ளனர்.

இம்மாதிரி அனுபவம் அதிகம் படிந்துள்ளவர்களே இன்று அங்கு நிறைந்திருக்கின்றனர்.

தேர்தலில் கலந்துகொள்ள விண்ணப்பம் போட்டவர்கள் ஏராளம். காங்கிரஸ் கமிட்டி பொறுக்கியெடுத்ததுபோக மிச்சமுள்ளோர் கைபாக்ஸ்கள். அதில் சந்தேகமில்லை.

காங்கிரஸ் கமிட்டி யெடுக்காவிட்டால், சுயேச்சையென்று சொல்லித் திரியும் தேர்தல் சுந்தரர்கள் எத்தனை பேர்!

இவர்கள் கைபாக்ஸ்களல்லாமல் காங்கிரஸ் இயக்கத்தைக் கட்டிக் காக்கும், காவலர்களா? இல்லை. கைபாக்ஸ்கள், அவர்கள்!

தேர்தலுக்குமட்டும், காங்கிரஸ் கமிட்டியாரால் கண்டுபிடிக்கப்பட்ட பணமூட்டைகள் காங்கிரஸ் இயக்கத்திற்கு கைபாக்ஸ்களாகாமல், வேறு எப்படியாவார்கள்?

பணமில்லாத காரணத்தால், தேர்தலில் சேர்க்கப்படாத, இன்னமும் ஒட்டிக்கொண்டுள்ள சிலதியாகிகள் கைபாக்ஸாகமாற எவ்வளவு நேரம் பிடிக்கும்?

கதருடையில் கைபாக்ஸ்கள் முதலில்: அவர்களைக் கவனித்து விட்டு, வரட்டும்.

அதைவிட்டு விட்டு, குக்கல் குரலில், குதர்க்கம் பேசுகிறார்கள்!

* * *

தேர்தல் பிரச்சாரம் என்றால், தாங்கள் இதுவரை செய்ததை யெடுத்துக் காட்டவேண்டும். இல்லாவிட்டால் இனிமேல் செய்யப் போவதையாவது சொல்லவேண்டும்.

இரண்டுமில்லாவிட்டால், எதிர்த்து நிற்போரைப்பற்றியாவது பேசித் தீரவேண்டும்!

அதையெல்லாம் செய்யாது, நாம் தேர்தலில் கலந்து கொள்ளவில்லையெனத் தெளிவாகத் தெரிவித்தும் நம்மைத் திட்டுகிறார்கள்! அதனால் அவர்கள் ஓட்டு பெறமுடியும் என்று நம்பினால் செய்யட்டும். நாம் கவலைப்படவில்லை.

காங்கிரசைவிட்டுப் பிரிந்துசென்றுள்ளவர்கள் காங்கிரஸ் இயக்கத்தினை வெடி வைத்து இடிக்கவே வெளியில் கிளம்பியுள்ளோம் என்று பேசிவருகின்றனர்.

கிழட்டுக் காங்கிரஸ்காரர்களும், தேர்தல் காங்கிரஸ்காரர்களும் வளர்வதைக்கண்டு, தேய்ந்த காங்கிரஸ்காரர்கள் தேடப்போவதும், வெடிமருந்தைத்தான்!

இத்தகைய கைபாக்ஸ்கள், ஏராளம், அங்கு.

இவர்கள் பிடிபடாத கைபாக்ஸ்கள்! நேற்றுவரை அவர்களுக்கு பிரியமானவர்களாக இருந்த கைபாக்ஸ்கள்!

இந்த கைபாக்ஸ்களைக் கண்டு பிடிப்பதைவிட்டு விட்டு, நம்மீது சீறுகிறார்கள்!

தண்டல் மொரார்ஜி!

பம்பாய் உள்நாட்டு மந்திரி மொரார்ஜி தேசாய் மிகப் பெரிய மனிதர்! அவரால் ஆகாத காரியம் கிடையாது! மதயானை அவர் முன் மண்டியிடும்! புலி பூனையைப்போல் பயந்து ஓடும்! நாகப்பாம்பு படமெடுக்க மறந்து, குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடும்!

ஆனால், இத்தகைய சாதனைகளெல்லாம் வெறும் கண்ணாமூச்சி விளையாட்டு, என்னுடைய இந்தச் சாதனைக்கு முன்னால், என்று கூறத் தகுந்த ஒரு மகத்தான காரியத்தைச் சமீபத்தில் செய்து முடித்திருக்கிறார், அரசியல் சித்தர் மொரார்ஜி தேசாய்!

ஆம், பம்பாய் நெசவாலை முதலாளிகள், தாங்களாகவே நேரில் வலியவந்து அவருக்குப் பணம் தருகிறேன் என்கிறார்கள். நேரில் வரமுடியாதவர்கள் "ஐயா, மொரார்ஜியாரே! என்னுடைய பணத்தைக் கருணை செய்து பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கடிதமூலம் கெஞ்சுகிறார்கள்.

ஆம், கோடிக் கணக்கான ரூபாய் லாபத்திலிருந்து கொஞ்சம் போனஸ் கொடுங்கள் என்று கேட்கும் தொழிலாளிகளுக்கு, கண்ணீர்ப்புகை, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், இவற்றைப் பரிசாக அளிக்கும் ஆலையரசர்கள்தான், மொரார்ஜிக்குப் பணந்தர மனமுவந்து முன்வந்துள்ளனர்.

சித்தர்களை நம்பி பித்துப் பிடித்தலைந்த காலம் மலையேறிவிட்டது; ஆலையூரார்கள் வெறும் மந்திரத்தில் மயங்கவில்லை: இயற்கைக்கு விரோதமான இவர்கள் செய்கையில் ஏதோ சூது புதைந்து கிடக்கிறது, என்று சிலர் உண்மையை ஆராயத்தொடங்கினர்.

காங்கிரஸ் தேர்தல் நிதிப் பெட்டிக்குள், நெசவாலையிலுள்ள பணம் தானாகவே வந்து உட்கார்ந்து கொள்ளவில்லை.

பம்பாயிலுள்ள தறி ஒன்றுக்கு ரூபாய் 15 அல்லது 20 வீதம், ஒவ்வொரு முதலாளியும் காங்கிரஸ் தேர்தல் செலவிற்காகத் தரவேண்டும், இது மொரார்ஜியின் உத்தரவு. இத் தகவலைத் தருவது அசோக மேத்தா, மற்றொரு அரசியல் கட்சியின் பொதுச் செயலாளர். மறைமுகமாக அவர் குற்றம் சாட்டவில்லை, வெளிப்படையாகக் கூறுகிறார்.

என் முழுப் பொறுப்பையும் உணர்ந்தே, வேதனைதரும் இவ்விஷயத்தைப் பற்றி மொரார்ஜிமீது குற்றஞ்சாட்டுகிறேன், என்று வலியுறுத்துகிறார் அசோகமேத்தா.

பம்பாயில் சுமார் 40,000 தறிகள் இருக்கின்றன. மொரார்ஜியின் தண்டல் விகிதப்படி, தறி ஒன்றுக்கு ரூபாய் 15 அல்லது 20 என்று கணக்கிட்டால், ஆறு அல்லது எட்டு லட்ச ரூபாய் கிடைக்கும். ஒரே ஒரு சிறிய போத்தின் மூலம். இவ்வளவு பெரிய பண முடிப்பு, காங்கிரஸ் தேர்தல் நிதிக்கு.

மொரார்ஜி ஒரு அசாதாரணப் பிறவி என்பது மாத்திரமல்ல, அவர் யோக்கியமானவருங் கூட! அதனால்தான், "நான் அவ்விதமான உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.. தண்டல் வசூலிக்கிறேன், எனக் கூறுவது கருப்புப் பொய்" எனக் கதறுகிறார்.

இக் கதறுதலில் பின்னிக்கிடந்த விளக்கமும் இப்பொழுது தலையை நீட்டுகிறது. அதை அவரே வெளியில் கொண்டு வருகிறார்.

நான் இதுவரை கட்சி வேலைகளுக்காகப் பணம் வசூலிக்கவில்லை. ஆனால், யாராவது தானாகப் பணம் கொடுத்தால், வாங்கிக்கொள்வேன். அப்படி வாங்கிக் கொள்ளுவது, காங்கிரஸ் தலைவன் என்ற முறையில், என்னுடைய பொறுப்பாகும். பணம் வேண்டுமென்று நானே யாருக்கும் கடிதம் எழுதவில்லை.

இந்த விளக்கத்திற்கு ஒரு விசித்திரமான வெளிச்சம் தருகிறார், பம்பாய் நெசவாலை முதலாளிகள் சங்கத் தலைவர் ஜி. டி. சோமானி என்பவர்.

காங்கிரஸ் தண்டலுக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று எங்கள் சங்கத்தில் முடிவு செய்யவில்லை... ஆனால் சங்க உறுப்பினர்கள் தாங்களாகவே கூடி, தண்டல் கட்டுவது பற்றிச் சொந்த முறையில் கலந்தாலோசித்தனர். அவர்களில் காங்கிரஸ் அபிமானிகளாக உள்ளவர்களெல்லோரும், பணம் கொடுக்கவுங் கூடும்.

இந்த வெளிச்சத்திற்கு மேல் அதிக வெளிச்சம் தேவையில்லை. ஆனால் ஒரே ஒரு விஷயத்தைமாத்திரம் இங்கு கவனத்தில் நிறுத்துதல் அவசியம். அதாவது, மந்திரி மொரார்ஜியார், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள 'நெசவு கண்ட்ரோல் கமிட்டி'யின் தலைவராவார். நெசவுத் தொழிலின் 'தலைவிதி' இக்கமிட்டியின் கையிலிருக்கிறது.

இந்நிலையில், மில் முதலாளிகள், மொரார்ஜியாரின் தேர்தல் நிதிக்குப் பணந்தர, நான், நீ, என்று அடித்துக்கொண்டு முன்வருவதில்விந்தை என்ன இருக்கிறது!

அண்மையில் யூனியன் பார்லிமெண்டில், முத்கல் என்ற உறுப்பினர், பணம் சம்பாதிப்பதற்காகத் தன்பதவியை உபயோகித்தார் என்ற விஷயத்தைப்பற்றி மிகத்தடபுடலான விவாதம் நடந்தது. கண்ணியத்திற்குப் புறம்பான வழியில் நடந்தார், என்று காரசாரமான வார்த்தைகள் வீசப்பட்டன. அவர் வெறும் பார்லிமெண்ட் உறுப்பினர் தானே! ஆகவே, அவர் உறுப்பினர் பதவியை ராஜிநாமாச் செய்து வெளியேற நேரிட்டது.

பிறகு, உத்தரப் பிரதேசத்து மந்திரி சி. பி. குப்தா என்பவர் காங்கிரஸ் தேர்தல் நிதிக்காக, அரசியல் கண்ணியத்திற்குப் புறம்பான முறையில் பணந்திரட்டுகிறார், என்ற திடுக்கிடும் செய்தி பத்திரிகைகளில் பிரசுரமாயிற்று. அவர்மீதுள்ள குற்றச்சாட்டுகள் இன்னும் ஆராயப்படவில்லை, குற்றத்தின் உருவம் புலனாகவில்லை.

இதற்குள், பம்பாய் மந்திரி மொரார்ஜியாரின் தண்டல் வைபவம் நடைபெறுகிறது. ஆலையரசர்கள் தங்கள் சொந்த லாபத்திலிருந்து மொரார்ஜியாருக்குப் பணம் தருவதைப்பற்றி நமக்கு அக்கரையில்லை. ஆனால், கம்பெனியின் லாபத்திலிருந்து அப்பணம் கொடுக்கப்படுமாயின் அது பெருத்த அநீதி, துரோகமுங்கூட. லாபத்தைத் தூக்கிக் காங்கிரஸ் நிதியில்போட்டு விட்டு, தொழிலாளிக்கு போனஸ் இல்லையென்று கூறுவதற்கு இது ஒரு தந்திரம் என்றுதான் மக்கள் கருதுவர்.

உபதேசம்!

பசியோடிருக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

பட்டினி கண்டு பயப்படாதீர்கள்.

உபவாசம் இருக்கச் சொல்லி உபதேசம் செய்தார் அவர். அந்த 'மகான்' காவி கட்டியில்லை. கமண்டல மேந்தியுமில்லை. ஜெபமாலை உருட்டவில்லை யோகதண்டுமில்லை, அவர் கையில்!

உபதேசம் புரிகிறார். ஆனால் உருவமோ விபரீதமாகிறது என்கிறாயே, என்று கேட்கத் தோன்றும்.

ஆம், விசித்திர உபதேசம் புரிந்தவர் காவியாடைக்காரரல்ல!

ஆகவே தான், அந்த உபதேசங் கேட்ட, மதுரை நகர மக்களே சிரித்தனர். மதுரை நகர் மட்டுமல்ல மாநிலமே சிரிக்கத்தான் செய்யும்.

உபதேசம் புரிந்தவர் மகானுமல்ல, மகரிஷியுமல்ல, மந்திரியார்! அவர் உபவாசம் இருக்கச்சொல்லி உபதேசம் புரிகிறார்!

மகான்களாவது, நோன்பிருங்கள் என்று கூறியிருப்பார்கள். விரதமிருங்கள் என்று கொஞ்சம் மறைத்துப் பேசியிருப்பர்.

மந்திரியாரோ, பட்டினி கிடவுங்கள் பாதகமில்லையென்கிறார்.

விரதமிருந்தால், மோட்சம் கிடைக்கும் என்று அவர்கள் கூறினார்கள்.

இவரும், அந்த உபதசேபுரிப் பாதையை விட்டு விலகாமல் பேசியுள்ளார்.

உலகத்தின் கண்களிலே நாம் பெரிய தேசத்தினராக முன்னேற வேண்டுமானால், பட்டினி கிடக்க வேண்டும் என்று சொல்லியுள்ளார்.

மோட்சத்திடத்தில், தேசமுன்னேற்றத்தை வைத்து விட்டார். அது மட்டுமல்ல, அதற்கு வழி பட்டினி யென்று குறிப்பிட்டுள்ளார்.

* * *

சுதந்திரம் பெற நாம் அதிகம் கஷ்டப்படவில்லை.

ஆகவே சுதந்திரத்தை நிலைநிறுத்த மேலும் துன்பப்படவேண்டும்.

இந்த உபதேச மொழிகளை உதிர்த்த உத்தமரும் அவரேதான்

சாங்கிரஸ் பிரச்சார பெருவாயர்கள், தொண்டை காயக்காய தாங்கள் சுதந்திரப் போரில் பட்ட கஷ்டங்களை எடுத்துக் கூறுகிறார்கள். மூச்சு திணறுகிறார்கள்!

ஆனால் மந்திரியார் சொல்கிறார், நாம் அதிகக் கஷ்டம் அனுபவிக்கவில்லை யென்று!

தொண்டரும், மந்திரியும், இந்த விவகாரத்தைப் பேசித் தீர்த்துக் கொள்ளட்டும். நாம் விலகிக் கொள்வோம்.

* * *

சுதந்திர வாழ்வென்றால் கஷ்டங்கள் நீங்கி, மகிழ்வது என்று நீங்கள் நினைத்தால் மாற்றிக்கொள்ளுங்கள்.

அதிக கஷ்டங்களை அனுபவிப்பதே, சுதந்திர வாழ்க்கையென்று அவர் குறிப்பிட்டு விட்டார்.

அதற்கு அவர் காட்டும் காரணம் அடிமை வாழ்வு நீங்கி, சுதந்திரம் தொடங்கும் இடைக்காலமாம் இது.

ஐந்தாண்டுகள் போதாதாம்! இன்னும் ஆண்டுகள் பல தேவையாம்!

ஆகவே, இந்தத் தேர்தலிலும், அவர்களையே தேர்ந்தெடுத்தாக வேண்டும்! இல்லா விட்டால், எப்படி மக்கள் இன்னும் அதிக கஷ்டங்களை அனுபவிப்பது—அதுதானே சுதந்திரத்தின் இலட்சணம்!

* * *

காங்கிரசாட்சி, ஐந்தாண்டுக் காலத்தில் ஏன் ஒன்றும் செய்யவில்லைதெரியுமா? இப்பொழுதுதான் விதைத்திருக்கிறார்கள். அறுவடை செய்வதற்குள் அவசரப் பட்டால் என்ன செய்வது? அதற்கு மக்களுக்குப் பொறுமை வேண்டும்!

பொறுத்திருங்கள்! இன்பத்தை இழுத்து வந்து நிறுத்துகிறேய்!

அவர் தான் குறிப்பிடுகிறார் இப்படி.

இத்தனையும் செய்யச் சொல்வது எதற்காகத் தெரியுமோ? எல்லோரும் தியாகிகளாகத் தான்! வேறொன்றறியார், பராபரமே!

எல்லோரும்தியாகியாகிவிட்டால், ஏக்கர் நிலத்திற்கு போட்டியல்லவா வந்து விடும் என்று 'ஐந்து ஏகர்' தியாகிகள் அலற வேண்டியதில்லை! ஏனெனில், இந்தத் தியாகத்தைச் செய்தால் மக்கள் எவரும் இருக்க மாட்டார்கள், பட்டினித் தியாகத்தால், சொர்க்கம் போய் விடுவார்கள்!

* * *

இத்தகைய அரிய உபதேசங்களை அள்ளித் தெளித்த பெரிய மந்திரியார் என்று தெரிந்து கொள்ளத் துடிப்பீர்கள்.

அவர்தான், சென்னைராஜ்யத்தின் மந்திரி, சந்திரமௌலி. இனி பேசாதீர்கள்! பட்டினி கிடக்கத் தொடங்குங்கள் நம் தேச முன்னேற்றத்திற்கு!

2-ம் பக்கத் தொடர்ச்சி

எதிர்ப்பேன்! என் உயிருள்ள அளவும் போராடுவேன்!!! என்று சங்கநாதம் செய்கிறார்.

நிறவெறி அக்கிரமத்தை எதிர்த்துப் போராடும் இந்த அறப்போர் செய்தி, நமக்கு மகிழ்வை அளிக்கிறது.

காந்தியாரின் 'பரம்பரை' என மார்தட்டுவோர், அவரது பெயரால் திருக்கூத்தாடுகிறார்கள்!

ஆனால்? அவரது பரம்பரையான மணிலாலோ, மார்தட்டுகிறார்--ஒரு கொடுமையை ஒழிக்க!

அரசியல் பரம்பரை செய்யத் தவறிய காரியத்தை அவரது பரம்பரை செய்கிறது—அதிலும் தன்னந்தனியாக.

இது, ஒரு அதிசய நிகழ்ச்சி; அரசியல் சரித்திரம் காணாத புதுமை.

ஆகவே, மணிலால் அறப்போர் செய்தி, நம் கருத்தில் செந்தேனை யூற்றுகிறது — அதுவும் 'காந்தி ஜயந்தி' பெயரில் கசப்பை அள்ளி, காங்கிரஸ்வாதிகள் அள்ளிக்கொட்டும் நேரத்தில்.

மகிழ்கிறோம், மணிலாலை, உளமார வாழ்த்துகிறோம்.

'காந்தி ஜயந்தி' நாளில். இந்தச் செய்தி நம்மைக் களிப்பிலாழ்த்துகிறது.

> "சுடுகாட்டுக்குப் போவதை விட காங்கிரஸ் சார்பில் தேர்தலுக்கு நிற்பது மோசம்"
>
> மதுரை வைத்தியநாதய்யர்-
> -M. L. A.
> 'சுதந்திர

திராவிட முன்னேற்றக் கழக

மாநில மாநாடு

இதைத் தாக்குகிறார்கள்! அதைத் தாக்குகிறார்கள்!
இங்கு கிளை! அங்கு கிளை! எங்கும் தழைக்கிறது கிளைகள்!
இடைவிடாத பிரச்சாரம்! இணையில்லா ஊக்கம்!!

மதத்துறை ஊழல்களைத் தாக்குகிறார்கள்.
ஆளவந்தாரின் போக்கை அம்பலப் படுத்துகிறார்கள்.
இழந்த இன்பத்தை மீட்போம் என்று முழக்கமிடுகின்றனர்
சுகபோகிகளையும் சுரண்டிப் பிழைப்போரையும் சாடுகின்றனர்.

புதிய அரசு கேட்கின்றனர்!

பெரும் பத்திரிகைகளின் இருட்டடிப்பு
பணம் படைத்தோரின் பரிகாசம்
மதப்புரட்டர்களின் சாபம்
மாற்றுக் கட்சியினரின் தூற்றல்
ஆளவந்தாரின் அடக்குமுறை

இவ்வளவும் கிளப்பிக் கொக்கரிக்கின்றனர்!
எனினும் வளருகிறார்கள் வளர்ந்தவண்ணம் இருக்கிறார்கள்

ஏன்? எப்படி? எதற்காக?

நாடு கேட்கிறது இவ்வண்ணம்

நமது வளர்ச்சி நாட்டிலே புதிய பிரச்சினையாகிவிட்டது.
கழகம் ஓர் கேள்விக்குறியாகிவிட்டது.
எனவே நமது முழு உருவமும் விளங்கும் வண்ணம் அமைதல்
வேண்டும், **மாநில மாநாடு.**

மாநில மாநாடு

இரண்டாண்டுகளாக திரட்டப்பட்டுள்ள எழுச்சியை எழிலுருவமாக்கும் சீரிய முயற்சி.

நாடெங்கும் தழைத்துள்ள நம் கழகக் கிளைகளை இணைத்து எஃகுக் கோட்டையாக்கும் திட்டம்.

இன்பத் திராவிடம் காணும், ஆக்க வேலைத்திட்டம் தீட்டிடும் மன்றம்.
முத்தமிழ் மணம் கமழும் கலை நிகழ்ச்சிகள் பூத்திடும் சோலை.

செயலாற்றும் வீரர்கள் சேர்ந்து நிற்கும் அணிவகுப்பு.

வாரீர் வீரர்காள்! திராவிடம் காண வாரீர்!!
தாயக விடுதலைக்கு வழி காண்போம் வாரீர்!!
வாரீர் முன்னேற்றக் கழகத் தோழர்காள்!
உமது உழைப்பின் உருவத்தைக் கண்டு களிக்க வாரீர்!

விளம்பரக்குழு.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,